மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

அ.வ.எண்.53/2023

வாக்குமூலம்: வா.சா.2 சுப்பிரமணி

07.06.2024: சாட்சி ஆஜர். சத்தியப் பிரமானம் செய்து வைக்கப்பட்டு குறுக்கு விசாரணை.

1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–

நான் மேல்கரைப்பட்டியில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் எங்கு பெண் எடுத்துள்ளேன் என்றால் மேல்கரைப்பட்டி நால்ரோட்டில் திருமணம் செய்துள்ளேன். திருமணத்திற்கு பிறகு நால்ரோட்டில் என் மனைவி வீட்டில் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல. அங்கும் உள்ளேன். எனது வீட்டிலும் வசித்து வருகிறேன். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் மற்றும் ஜே.சி.பி. டிராக்டர் வைத்து தொழில் செய்து வருகிறேன். நானும் வாதி தங்கமுத்தும் சேர்ந்து நில புரோக்கர் தொழில் செய்து வருகிறோம் என்றால் சரிதான். வேறு நபர்களுடன் சேர்ந்து தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தப்பட்ட சர்வே எண் தெரியுமா என்றால் சரியாக ஞாபகமில்லை. நான்கு எல்லைகள் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. தங்கமுத்து மற்றும் அவருடைய சகோதரர், சகோதரிகள் வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்படுத்திக்கொண்டதாக முதல் விசாரணை பிரமான பத்திரத்தில் கூறியுள்ளீர்கள், அந்த வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்ட நாள், வருடம், மாதம் சொல்லமுடியுமா என்றால் ஞாபகமில்லை. பாகப்பிரிவினை எந்த சொத்தை பொறுத்து ஏற்பட்டது என்றால் வீடு சம்பந்தமாக மட்டும் ஏற்படுத்தப்பட்டது. தற்பொழுது தங்கமுத்து குடியிருக்கும் வடக்கு பார்த்த வீடு சம்பந்தமாக மட்டும் வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டதா என்றால் இல்லை. அதற்கு ஒட்டி உள்ள கிழமேல் வீடு, அருகில் உள்ள இடம் சம்பந்தமாகவும் பாகப்பிரிவினை ஏற்பட்டது. நீங்கள் வாதி தங்கமுத்துவின் தொழில் கூட்டாளி என்பதால் அடிப்படை விபரங்கள் எதுவும் தெரியாமல் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாய்மொழியாக என்ன பேசிக்கொண்டார்கள் என்றால் தங்கமுத்துவின் அக்கா, தம்பி இருவரும் சேர்ந்து வீடு மற்றும் அது சார்ந்த இடங்களை தங்கமுத்து வைத்துக்கொள்ள வேண்டும் என்றும், அவர் அம்மாவை பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் பேசினார்கள். 1, 2 பிரதிவாதிகளின் வீடு எங்கு உள்ளது என்றால் தங்கமுத்து வீட்டிற்கு வடபுறத்தில் வடக்கு பார்த்து உள்ளது. எனக்கு தாவா சொத்து பற்றி விபரம் தெரியவில்லை என்றும், தங்கமுத்துவுக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

(3,4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது)

Dictated by me in open court and typed by the Typist and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

R KARTHIKEYAN

Digitally signed by R KARTHIKEYAN
Date: 2024.06.07 16:07:25 +0530

District Munsif,
Palani.